# சத்தாய் நிஷ்களமாய்

ஆசிரியர் குறிப்பு : **எ.ஆ. கிருஷ்ணபிள்ளை (1827 – 1900)**

பிறப்பிடம் : பாளையங்கோட்டை அருகில் கரையிருப்பு கிராமம்.

சங்கராபரணம் ரூபகதாளம்

1. சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய மும் இலதாய்,
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நாயடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந் – து,
அத்தா, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

2. எம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்
கைம்மா றுண்டு கொலோ? கடைகாறுங் கையடையாய்
சும்மாரட்சணை செய், சொல்சுதந்தரம் யாதுமிலேன்
அம்மான், உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

3. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்க வென்றே புணையாயினை கண்ணிலியான்,
பரசேன் பற்றுகிலேன், என்னைப்பற்றிய பற்றுவிடாய்
அரசே, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

4. தாயே, தந்தைமர் குருசம்பத்து நட்பெவையும்
நீயே எம்பொருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்,
‘ஏயே’ என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

5. துப்பார் சிந்தையிலேன் மறைந்தீட்டிய தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநாளெனைத் தாங்கிக்கொள்ள,
இப்பா ருய்யவென்றே மனுக்கோலமெ டுத்த எங்கள்
அப்பா, உன்னையல்லால் எனக்கார் துணை யாருறவே?

இப்பாடலையே முதற்பாடலாக வெளியிட்டு வரும் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தை இதற்காகவே பாராட்டலாம். ஏனெனில் இதன் ஆரம்பகால தமிழ்ப் பதிப்பாளராக 1892 முதல் பணியாற்றியவர் எ.ஆ.கிருஷ்ணபிள்ளை அவர்கள். மீட்பு இவர் பாடல்களின் மையப் பொருளானதால் 'மீட்புக் கவிஞர்' எனவும், இவர் இரட்சண்ய மனோகரத்தில் 566 பாடல்களும் இரட்சண்ய யாத்திரீகத்தில் 3813 பாடல்களும் தேவாரப் பாடல்களில் 144 பாடல்களும் 'இலட்சண்ய சமய நிர்ணயம்' (1898) 'இரட்சண்ய சரிதம்' போற்றித் திருஅகவல்' இலக்கண சூடாமணி (1883), காவியதரும் சங்கிரகம் (2500), வேதபொருள் அம்மானை மற்றும் பல நூல்களையும் இயற்றியுள்ளார். தென்கலை வைணவனவரான இவரின் தந்தை சங்கர நாராயணப்பிள்ளையால் சிறுவயதிலேயே திருவாசக் கலம்பகம், திருவாய்மொழி, சடகேபரந்தாதி முதலியவற்றை மனனம் செய்தார். தந்தையின் கம்பராமாயண சொற்பொழிவுகளை கேட்டறிந்தார். 14 வயதிற்குள் கம்பராமாயணப் பாடல்களை (1200) மனனம் செய்து அவற்றின் பொருள் கூறவும் புலமை பெற்றார். உரிச்சொல் நிகண்டு, திருக்குறள், ஆத்திச்சூடி முதலியனவும் பிலவன ஜோசியரிடம் வடமொழியும் கற்றார். ரேனியஸ் போதகர் தமிழ் பயின்றவரிடமே குருக்குல கல்வி மூலம் இலக்கண இலக்கியம் பயின்றார். எனவே இவரை 'கிறிஸ்தவ கம்பர்' என போற்றப்பட்டு வருகிறார். திருவனந்தபுரம் மகாராஜர் கல்லூரியில் மனோன்மனியம் சுந்தரம் பிள்ளையவர்களுடன் பணியாற்றினார். ஜான் மர்டாக் இவரை சென்னையில் 1892இல் சிஎல்எஸ்-இன் தமிழ்ப்பிரிவின் ஆசிரியராக்கினார்.

இவரின் இரட்சண்ய குறள், இரட்சண்ய பாலபோதனை ஆகியன இன்னும் கிடைத்ததில், சிஎல்எஸ் - இல் உள்ள ஐந்து கீர்த்தனைகளையும் கண்ணிகளாகவே அமைத்துள்ளார். திருமறை மொழிபெயர்ப்பில் ஹென்றி பவருடன் தன், தம்பி முத்தையா பிள்ளை பணியாற்றியதால் தம் பெயரோடு ஹென்றி எனவும், 30ஆம் வயதில் தாம் திருமுழுக்கு பெற்ற மைலாப்பூர் தூய தாமஸ் ஆலயத்தில் அன்று அருளுரையாற்றிய ஆல்பர்ட் ஆர்.சைமன்ஸ் என்பவரின் பெயரையும் சேர்த்து H.A.கிருஷ்ணபிள்ளை என பெயர் இடும்படி கேட்டுக் கொண்டார். தந்தைக்காக 15ஆம் வயதில் 12 வயது சிறுமியை மணந்தார். பேராயர் கால்டுவெல் திருநெல்வேலி இறையியல் கல்லூரியில் இவரைத் தமிழாசிரியர் ஆக்கினார். திருவனந்தபுரம் (சி.எம்.எஸ்) கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் ஆனார். மரணத்தருவாயில் தாமரை மொட்டுக்களின் நேசியாம் டோனவூர் கார்மைக்கேல் அம்மையார் உடனிருந்தனர். திருநெல்வேலி சமாதானபுரம் கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் பண்ணப்பட்டார்.

இத்தேவாரப் பாடல் சங்கராபரணம் இராகத்தில் சதுரஸ் ரூபகதாளத்தில் (தக-தக-திமி) பக்திச் சுவையோடு, பாவ உணர்வோடு நம்பிக்கையின் அறிக்கையோடு எழுதப்பட்டுள்ளது. பண்டிதர் நடை எனப்படும் செம்பவள நடை தமிழில் வடசொற்களைப் பயன்படுத்தப்படுவது அவர் காலத்துச் சிறப்பாகும்.

ஆயினும் தன்னுடைய 12 வயது மகன் தியாகராஜனுக்காக ‘ஜெபசிந்தை எனில் தாரும்’ என்ற பாடலை மிக எளிய தமிழில் இயற்றியுள்ளார்.